# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV, 2016/2017

### தொழிற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. தொழில் உறவானது ஊழியத்தின் நுட்பமான கருத்தேற்புகளை விட அந்த உறவின் பொருளாதார யதார்த்தங்களைப் பார்த்தே வரையறை செய்யப்படுதல் வேண்டும். எல்லா விடயங்களையும் நீதிமன்றங்கள் பார்க்கும் போது தொழில் அந்தஸ்தின் கலப்பு பரீட்சையொன்றையே பின்பற்றியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

   (Dawn D.Bennett – Alexander and Lawra B. Pincus, Employment Law for Business, at p. 42)

   நீர் உடன்படுகின்றீரா? எவரேனும் ஒருவர் தொழில் உறவின் கீழ் வேலை செய்கின்றாரா என்பதனைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்களால் வழங்கப்பட்டுள்ள வேறுபட்ட பொருள்விளக்கங்கள் மீது விசேட வலியுறுத்தல் தந்து விளக்குக.

2. (அ) இலங்கை தொழில் முயற்சியாளர்கள் குழுமத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில் சந்தையொன்றில் பின்வரும் தொனிப்பொருளில் சமர்ப்பணமொன்றைச் செய்வதற்கான வளவாளரொருவராக நீர் அடையாளங் காணப்பட்டுள்ளீர்:

   "இலங்கையிலுள்ள வேறுபட்ட தொழில்துறைகள் சம்பந்தப்பட்ட சட்டக் கட்டமைப்பு"

   அந்த தொழிற் சந்தையில் சமர்ப்பிக்கப்படுவதற்காக வழங்கப்பட்டுள்ள தொனிப்பொருளில் உமது ஆவணத்தை எழுதுக.

   (ஆ) ஒவ்வொரு சூழ்நிலையிலும் எழுகின்ற சட்ட விளைவுகளுடன் குறிப்பாக தொடர்புபடுத்தி பின்வரும் கூற்றுகளை விளக்குக:

   (i) பகிரங்க கூட்டுத்தாபனங்கள் தூய பகிரங்க அதிகாரவமைப்பொன்றிற்கும் தனியார் வர்த்தக கம்பனியொன்றுக்கும் இடையேயான ஏதேனுமிடத்தில் அமைந்துள்ளன.

(ii) பகிரங்க உத்தியோகத்தர்கள் அமைச்சரவையினதும் ஜனாதிபதியினதும் விருப்பத்திலேயே பதவியைக் கொண்டுள்ளனர்.

(iii) வீட்டு பணியாளர்கள் இலங்கையின் தொழிற் சட்டப் பரப்பின் கீழ் எவ்வகையிலும் பாதுகாக்கப்படவில்லை.

3. (அ) *State Distilleries Corporation* v. *Jackson Rupasinghe* [(1994) 2 Sri LR 395] என்பது இலங்கையில் தகுதிகாண்நிலை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை முன்னேற்றுகின்ற முக்கியமானதொரு வழக்காகும். நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) பூகொட பற்றிக்ஸ் லிமிற்றெட் ஆனது ரவி என்பவனை உதவி விற்பனையாளன் ஒருவனாக 2012 இல் சேர்த்துக்கொண்டது. அக் கம்பனியானது அவனுக்கு விற்பனை ஊக்குவிப்பு தொடர்பான வேலையில் பயிற்சியை வழங்கியதுடன் அவனது நாளாந்த சம்பளங்களை அதிகரித்தது. அக் கம்பனியானது ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றிலான தனது விற்பனை சிறுகடையொன்றின் பொறுப்பாளனாக அவனை நியமித்ததுடன் அந்த விற்பனை சிறுகடையில் ரவி வாரமொன்றில் ஆறு நாட்கள் வேலை செய்தான். அவனது நாளாந்த சம்பளங்கள் ரூபா 1,300/= என்பதுடன் அக் காலப்பகுதியில் அவன் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரு வாரங்களுக்கு ஒரு தடவை அதனை வழங்கியது. 2015 இல், அக் கம்பனியானது கடனொன்றைப் பெற ரவியை இயலச்செய்ய கடிதமொன்றை வழங்கியது. அக் கடிதத்தில் அக் கம்பனியானது "...இலிருந்து அமைய வேலையாளொருவனாக ரவி வேலை செய்கின்றான்" என குறிப்பிட்டிருந்தது. எவ்வித ஆட்சேபனையுமின்றி ரவி அக் கடிதத்தை ஏற்றுக்கொண்டான். பிணக்கொன்றின் பின்னர், அக் கம்பனியானது 2017 யூனில் "உமது அமைய ஊழியமானது கம்பனிக்கு இனிமேல் தேவையில்லை." என தெரிவித்து அவனது சேவைகளை முடிவுறுத்தியது. அக் கம்பனியிலான அவனது ஊழியத்தின் தன்மையானது 'அமையமானதா' அல்லது 'நிரந்தரமானதா' என அறிய ரவி விரும்புகின்றான்.

அவனுக்கு ஆலோசனை வழங்குக.

4. தேவா என்பவன் அலுவலக பதவிநிலை உத்தியோகத்தன் ஒருவனாக கடந்த பதினைந்து வருடங்களாக ஹொறைசன் வங்கியில் வேலைசெய்து வருகின்றான். நேர்மையின்மை மற்றும் நம்பிக்கை இழப்பு ஆகிய காரணங்களின் அடிப்படையில் உள்ளக விசாரணையொன்றுக்குப் பின்னர் தேவாவினுடைய சேவைகளை அவ் வங்கியானது முடிவுறுத்தியது. அந்த வங்கிக்கும் அவனுக்கும் இடையேயான சேவை ஒப்பந்தத்தின் வாசகமொன்றுக்கு அமைய தேவா செயற்படாமையினால் குற்றச்சாட்டுக்கள் எண்பிக்கப்பட்டுள்ளதனால் வேலைமுடிவுறுத்தலானது அவசியமாகியுள்ளது என வங்கி கருதுகின்றது. அந்த இயைபான வாசகம் பின்வருமாறு உள்ளது:

"நீர் உமது முழு நேரத்தையும் கவனத்தையும் உமது கடமைகளை நிறைவேற்ற வழங்க வேண்டுமென்பதுடன் அதனது ஊழியர்களின் வழிகாட்டுதல்களுக்கும் முழுமையான இணங்கியொழுகுதலுக்காகவும் காலத்திற்குக் காலம் வங்கியினால் வழங்கப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை அனுசரிக்குமாறும் நீர் வேண்டப்படுகின்றீர். இயக்குனர் சபையின் அனுமதியின்றி ஏதேனும் இணையான இலாபமீட்டும் ஊழியத்தில் உயர்தொழிலில் அல்லது வியாபாரத்தில் நீர் உம்மை ஈடுபடுத்துதலாகாது."

பின்வரும் குற்றச்சாட்டுகளை அந்த குற்றப்பத்திரம் கொண்டிருந்தது:

(அ) அந்த ஊழியர் அக் குறிப்பிட்ட வாசகத்தினை மீறும்வகையில் அரசாங்கத்தினால் / கூட்டுத்தாபனங்களினால் வரையப்பட்ட காசோலைகளையும் மற்றும் காலங்கடந்த காசோலைகளையும் பணமாக்கும் நோக்கில் "ஸ்ரீ லக்ஷ்மி எக்சேன்ஜ்" என பெயரிடப்பட்ட வியாபாரமொன்றை ஆரம்பித்து அவனது மனைவியின் பெயரில் அவ் வியாபாரத்தை பதிவுசெய்துள்ளான்.

(ஆ) அந்த ஊழியர் வாடிக்கையாளர்களின் கணக்குகள் பற்றிய இரகசியம் தொடர்பான விதிகளை மீறி அக் காசோலைகளைப் பணமாக்கும் முன்னர் வங்கியினது வாடிக்கையாளர்களின் இரகசிய தகவலைப் பெற தனது பதவியைப் பயன்படுத்தியுள்ளான். இது "ஸ்ரீ லக்ஷ்மி எக்சேன்ஜ்" இலுள்ள ஊழியரொருவருடன் அவன் கொண்டிருந்த கிரமமான தொலைபேசி உரையாடல்கள் பற்றிய சான்றினைப் பெற்றதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அந்த வியாபாரமானது அவனது மனைவியின் பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் பண கைமாற்றல் நடவடிக்கைகள் பற்றியோ அல்லது வங்கி விடயங்கள் பற்றியோ அவளுக்கு அறிவு இல்லை என்பதுடன் அவள் இல்லத்தரசியொருவராகவே இருந்தாள்.

(இ) காசோலை பணமாக்கல்களில் ஈடுபடும் போது அந்த ஊழியனினால் கணிசமானளவு கமிஷன்கள் சேகரிக்கப்பட்டது என்பதுடன் அது வங்கியின் வியாபாரத்துடன் நேரடி முரண்பாட்டைக் கொண்டிருந்தது. அவ்வாறாக அந்த ஊழியர் நேர்மையீனமாகச் செயற்பட்டார் என்பதுடன் வங்கி அவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துள்ளது.

உள்ளக விசாரணையில் தேவா வாதிட்டதாவது

(i) "ஸ்ரீ லக்ஷ்மி எக்சேன்ஜ்" ஆனது அவனது வியாபாரமாக இருக்கவில்லை என்பதுடன் அது பண வழங்கலில் ஈடுபட்டிருக்கவுமில்லை.

(ii) அந்த சேவை ஒப்பந்தம் கொண்டிருந்த அந்த வாசகமானது வழமையான வேலை / அலுவலக நேரங்களிற்கு வெளியே மற்றொரு தொழிலில் ஈடுபடுவதிலிருந்து அவனைத் தடுத்திருக்கவில்லை.

(iii) 'அவர்கள் வருமானமீட்டும் வேறொரு வியாபாரத்தில் ஈடுபடவில்லை' எனும் பிரகடனமொன்றைச் செய்யுமாறு அந்த ஊழியர்களைத் தேவைப்படுத்தும் அந்த சுற்றுநிருபமானது, அவ்வாறு ஏதேனுமிருந்தால், அத்தகைய ஈடுபடுகைகளிலிருந்து அவர்கள் விலக வேண்டிய காலப்பகுதியை குறித்துரைக்கவில்லை.

(iv) அந்த உள்ளக விசாரணைக்காக அவனுக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரத்தில் இரகசிய மீறுகை என்ற விடயமானது அவனுக்கு எதிரான குற்றச்சாட்டொன்றாக இருக்கவில்லை.

ஹொறைசன் வங்கியின் தொழிற்சங்கமொன்றானது வேலைமுடிவுறுத்தலுக்கு எதிராக தேவாவின் சார்பில் தொழில் நியாயசபையில் விண்ணப்பமொன்றைச் செய்தது.

பின்வரும் விடயங்களை ஆராய்க:

(அ) அத் தொழிற்சங்கமானது என்ன அடிப்படையில் தேவாவின் சார்பாக விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(ஆ) அந்த வேலைமுடிவுறுத்தலுக்கு எதிராக விண்ணப்பமொன்றைச் செய்யும் போது பின்பற்ற வேண்டிய நடபடி முறை மற்றும் திருத்தப்பட்டவாறான 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தில் உள்ளவாறான பொருத்தமான ஏற்பாடுகள்.

(இ) நீர் அந்த தொழில் நியாய சபையின் தலைவராக இருந்தால் வழங்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் கட்டளையொன்றை நீர் எவ்வாறு ஆக்குவீர்?

(ஈ) அந்த தொழில் நியாயசபையின் தலைவராக அந்த சேவை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்த வாசகத்தால் நீர் கட்டுப்பட்டுள்ளீரா? அல்லவா?

5. பின்வரும் நியதிச் சட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஏற்பாடு / கள் இனால் தோற்றுவிக்கப்பட்டுள்ள <u>குழப்பநிலை ஒன்றை</u> (an ambiguity) அடையாளங் காண்பதுடன், தீர்ப்புச் சட்டத்தின் பின்னணியில், நீதிமுறை பொருள்கோடல் மூலம் அந்த குழப்ப நிலையை சீர்படுத்துவதற்காக அந்த அடையாளங் காணப்பட்ட ஏற்பாடு / கள் மீது நீதித்துறையால் செய்யப்பட்ட தலையீட்டை விளக்குக:

(அ) திருத்தப்பட்டவாறான 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்.

(ஆ) திருத்தப்பட்டவாறான 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டம்.

(இ) திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்கள் ஊழிய முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

6. கைத்தொழில் உறவுகளில் தொழிற்சங்கங்கள் அவைகளுடைய நெறிமுறையான செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமானால், அவைகளுடைய செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் பொதுச்சட்ட பொறுப்புடைமையிலிருந்து பாதுகாப்பு அவைகளுக்கு தேவைப்படுகின்றது. 1935 இலிருந்து இது நியதிச் சட்ட நோக்கங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. ஆனால் அந்த நியதிச்சட்ட விடுபாட்டுரிமைகளானவை எதனையும் செய்வதற்கான உரிமம் ஒன்றாக இல்லாது, நெறிமுறையான நோக்கங்களில் ஈடுபடும்போது தொழிற்சங்கங்களுக்கான பாதுகாப்பு ஒன்றையே வழங்குகின்றன.

மேலுள்ள பந்தியை கவனமாக வாசித்து பின்வருவனவற்றிற்கு விடையளிக்க:

(அ) தொழிற் சங்கங்களின் பயனுள்ள கைத்தொழில் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் பொதுச்சட்டத்தில் நன்கு தாபிதமான சட்ட பொறுப்புடைமைகளை எடுத்துக்காட்டுகளுடனும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடனும் விளக்குக.

(ஆ) தொழிற் சங்கங்களுக்கு இலங்கையின் தொழிற் சங்க கட்டளைச் சட்டத்தினால் (திருத்தப்பட்டவாறான 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பின் அளவையும் தன்மையையும் விளக்குக.

(இ) ஏதேனும் இருந்தால், தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் மட்டுப்பாடுகளைக் குறிப்பிடுக.

7. (அ) சிறுவர் வேலைக்கமர்த்தல் தொடர்பான சர்வதேச தொழில் தாபனத்தின் முக்கிய சமவாயங்கள் பொருளாதார சுரண்டலிலிருந்து சிறுவர்களை எந்தளவிற்குப் பாதுகாக்கின்றன என்பதனை ஆராய்க.

(ஆ) சர்வதேச தொழில்தாபனத்தின் பாரபட்சம் பற்றிய சமவாயம் (ஊழியம் மற்றும் தொழில்) (C 111) இனால் தாபிக்கப்பட்டுள்ள தொழில் தராதரங்களுடன் இலங்கையின் தொழில்தராதரங்கள் எந்தளவிற்கு இயைபாக உள்ளன என ஆராய்க.